# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1 Date : 07.11.2024
Case No. : O.S. 439/2019 Nationality : Indian
Name : பாலமுருகன் Religion :
Father's/Husband's Name : செல்வராஜ் Age : 47
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் 4ம் வாதி என்றால் சரிதான். 1ம் வாதி எனது தந்தை என்றால் சரிதான். எனது தந்தை 25.05.2022 ம் தேதி இறந்துவிட்டார். 2ம் பிரதிவாதிக்கும் 1ம் வாதிக்கும் என்ன உறவுமுறை என்றால் அண்ணன், தங்கை ஆவார்கள். இவ்வழக்கில் தாவா சொத்தாக புல எண் 163/4 ஏ 1- மற்றும் புல எண் 163/5 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண் 163/4 ஏ 1ன் விஸ்தீரணம் 6.5 ஏர்ஸ் என்றால் சரிதான். புல எண் 163/5 ன் விஸ்தீரணம் 1 ஏர்ஸ் என்றால் சரிதான். புல எண் 163/4 ஏ 1 ல் கண்ட சொத்து பசுபதீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். வழக்குரையில் தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கும் சமுதாய மிராசுதாரர்களுக்கும் சொந்தமானது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் தாவா சொத்துக்களின் நான்கெல்லை தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

2. பிராது வரைபடத்தில் தாவா சொத்துக்கள் தெளிவாக பிரித்து காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. புல எண் 163/4 ஏ 1ன் நான்கு பக்க அளவுகள் வழக்குரையில்

சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புல எண் 163/5ன் நான்கு பக்க அளவுகள் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புல எண் 163/4 ஏ 1 மற்றும் புல எண் 163/5 ல் கண்ட சொத்துக்களுக்கு தனித்தனியாக நான்கெல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எந்த சர்வே எண்ணில் மாடி வீடு உள்ளது, எந்த சர்வே எண்ணில் கூரை வீடு உள்ளது என்று வழக்குரை சொத்து விவரத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

3. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நாங்கள் தாவா சொத்தில் 3 தலைமுறையாக அனுபவத்தில் இருந்து வருகிறோம். பிரதிவாதிகள் அதில் தடை ஏதும் செய்யாமல் இருக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் தாவா சொத்துக்கள் தெளிவாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய இடத்தை நீதிமன்றம் மூலமாக அளந்தார்களா என்றால் அளந்தார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய விவரம் தெரியுமா என்றால் தெரியும். சார் ஆய்வாளர் அறிக்கையில் புல எண் 163/4 ஏ 1ன் புஞ்சை பரப்பு 6.5 ஏர்ஸ் பட்டா எண் 509 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சார் ஆய்வாளர் அறிக்கையில் மேற்படி பட்டா அருள்மிகு பசுபதீஸ்வரர் சுவாதி திருக்கோவில், சீனிவாசமூர்த்தி, மங்களம், ஆதிமூலம், ராமமூர்த்தி, நாராயணசாமி ஆகியோர் பெயரில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சார் ஆய்வாளர் அறிக்கையில் புல எண் 163/5ன் புஞ்சை பரப்பு 1 ஏர்ஸ் பட்டா எண் 569 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து வைத்திலிங்கம் மகன் நடேசன் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அவர் எனது தாத்தா ஆவார். 2ம் பிரதிவாதி பானுமதியின் தந்தைதான் மேற்படி நடேசன் என்றால் சரிதான்.

4. புல எண் 163/5 மற்றும் புல எண் 163/4 ஏ 2 ல் சேர்ந்தார்போல் ஷீட்டு வீடு உள்ளது

என்றால் சரிதான். புல எண் 163/4 ஏ 1 மற்றும் புல எண் 163/4 ஏ 2 ல் சேர்ந்தார்போல் மாடி வீடு உள்ளது என்றால் சரிதான். சார் ஆய்வாளர் அறிக்கையில் புல எண் 163/4 ஏ 1ல் கண்ட சொத்து காலியாக உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மரங்கள் உள்ளது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது புல எண் 163/4 ஏ 1க்கு மட்டும்தான் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கோவிலை தவிர மற்ற மிராசுதார்கள் உரிமையாளராக உள்ளார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. கோவிலை தவிர மற்ற நபர்களிடமிருந்து நாங்கள் அதிகார ஆவணம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து முழுவதும் 1993 ம் ஆண்டிலிருந்து 2 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.